20.06.2025 Hmop .289/2023 .ம.சா.1 கிருஷ்ணன்

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

நான் 12 ம்வகுப்பு வரை படித்துள்ளேன். எந்த ஆண்டு முதல் எந்த ஆண்டு வரை வெளிநாட்டில் இருந்தேன் என்றால் 1998 முதல் 2008 வரை வெளிநாட்டில் இருந்தேன். மேற்படி காலகட்டத்தில் 2003,2004,2006 ல் தாயகம் வந்தேன். அப்போது நான் 3 மாதம் தாயகத்தில் இருப்பேன். திருமண தேதி 5.11.2003 ஆகும். எங்களது திருமணம் பெரியவர்கள் பேசி எங்களது இருவரின் சம்மதத்தின் பேரில் தான் நடைபெற்றது என்றால் சரிதான். திருமணம் நடைபெற்ற பிறகு எப்போது வெளிநாடு சென்றேன் என்றால் திருணமாகி 60 நாளில் வெளிநாடு சென்றேன். திருமணத்தின் பயனாக முதன்முதலில் ஒரு பெண் குழந்தை பிறந்தததது. முதல் பெண் குழந்தை பிறந்த தேதி 20.08.2004 என்றால் சரிதான். அந்த சமயத்தில் எதிர்மனுதாரரின் பெற்றோர்கள் தான் பிரசவம் பார்த்தார்கள் என்றால் சரிதான். அதன்பின்பு நான் வெளிநாட்டில் இருந்த போது எதிர்மனுதாரர் தான் குழந்தையை வளர்த்தார் என்றால் சரிதான். குழந்தை பிறந்து எவ்வளவு காலம் கழித்து நான் தாயகம் வந்தேன் என்றால் குழந்தை பிறந்து 11 மாதம் கழித்து தாயகம் வந்தேன். அதன்பின்பு 20.10.2006 ல் ஒரு பெண் குழந்தை பிறந்தது என்றால் சரிதான். அந்த குழந்தையின் பிரசவ செலவை எதிர்மனுதாரரின் பெற்றோர்கள் தான் செய்தார்கள் என்றால் நான் பணம் கொடுத்து விட்டேன் . அவர்கள் பார்த்தார்கள். மேற்படி விபர்தை என் மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிரூரையை படித்து பார்த்தேனா என்றால் நான் படித்து பார்க்கவில்லை. எதிரூரையில் உள்ள விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். இரண்டு பெண் குழந்தைகளும் என் மனைவி பராமரிப்பில் தான் வளர்ந்தார்கள் என்றால் சரிதான். முதல் பெண் குழந்தை பெயர் தேவி பிரியா ஆகும். என் முதல் குழந்தைக்கு என் மனைவி தான் திருமண ஏற்பாடு செய்தார்

என்றால் சரிதான். என் முதல் குழந்தை நிச்சயதார்த்தம் மற்றும் திருமணத்திற்கும் நான் செல்லவில்லை என்றால் சரிதான். என்னிடம் தகவல் சொல்லவில்லை. அப்போது நான் உள்ளூரில் தான் இருந்தேன் என்றால் சரிதான். நானும், எதிர்மனுதாரரும் பக்கத்து பக்கத்து தெருவில் வசித்து வருகிறோம். ரோட்டிற்கு மேற்கும், கிழக்கும் குடியிருந்த வருகிறோம். எனது மகளுக்கு திருமணம் நடந்த விபரம் தெரியும் என்றால் தெரியாது. எனது மகளுக்கு திருமணம் நடைபெற்ற விபரம் எனக்கு தெரியாது என பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. 2 வது மகள் பெயர் பிரகதியை நாளது வரை என் மனைவி தான் பாதுகாத்து பராமரித்து வருகிறார் என்றால் சரிதான். நானும், என் மனைவியும் சேர்ந்து வாழ்ந்த காலத்தில் தீராத பிரச்சனை ஏதும் இல்லை என்றால் சரியல்ல. பிரச்சனை இருந்தது. தீராத பிரச்சனை என்னவென்றால் நான் சொல்வதை கேட்கமாட்டார். எனக்கு கணவர் என்ற மதிப்பு மரியாதை எதுவும் கொடுக்க மாட்டார். என் மூத்த மகள் மற்றும் இளைய மகள் என்ன படித்துள்ளார்கள் என்றால் பொறியியல் படிப்பு படிப்பதாக கேள்விபட்டேன். அவர்களது படிப்பு முடிந்து விட்டதா இல்லையா என்பது எனக்கு தெரியாது. படிப்பு வகைக்கு நான் செலவு செய்தது கிடையாது என்றால் என் பிள்ளைகள் வந்து பணம் பெற்று சென்றார்கள். நான் கல்லூரியில் பணம் செலுத்தியதற்கான ரசீது எதுவும் இல்லை என்றால் சரிதான். எதிர்மனுதாருக்கு நான் பராமரிப்பு செலவிற்கு பணம் கொடுத்தற்கான ஆவணம் இல்லை என்றால் கையில் தான் பணம் கொடுப்பேன். அதற்கு சாட்சியம் இல்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரர் நல்ல மனைவியாக தான் இருந்து வந்து குடும்ப பொறுப்புகள் அனைத்தையும் பார்த்து வந்தார் என்றால் சரியல்ல. நான் தான் எவ்வித பொறுப்பையும் கவனிக்கவில்லை என்றால் சரியல்ல. இரண்டு பெண் குழந்தைகளின் எதிர்காலம் கருதி குடும்ப நலன் கருதியும் எதிர்மனுதாரர் தற்போது வரை சேர்ந்து வாழ தயாராக உள்ளார் என்றால் சரியல்ல. நான் நல்ல

கணவராக இருக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் எனக்கு சேர்ந்து வாழ விருப்பமில்லை. என் மனுவை நான் பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல . உண்மையான மனு தான் தாக்கல் செய்துள்ளேன். எனக்கும் எதிர்மனுதாரருக்கும் நியாயமான எந்தபிரச்சனையும் இல்லை என்றால் சரியல்ல. நான் எழுத்துபூர்வமாக சேர்ந்து வாழ நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் பலமுறை பெரியவர்கள் மூலம் பேசியும் அவர் வாழ வரவில்லை. அவர் எதற்கும் உடன்பாட்டிற்கு வரவில்லை. என்ன நடவடிக்கை எடுத்தேன் என்பதற்கு ஆதாரம் உள்ளதா என்றால் இல்லை. என் மனு சட்டத்திற்கு புறம்பாக உள்ளது என்றால் சரியல்ல. என் மனு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

(ஒம்)ஏ.பிஸ்மிதா,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.